In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.C.4/2025
Deposition of PW.40
****

Name திரு.பெருமாள்சாமி

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14th day of July 2026.

**A1 present. A2 absent. Petition u/s.355 BNSS is filed and allowed.**

**முதல் விசாரணை :**

நான் 2001 முதல் 2006 வரை தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் துணை காவல் கண்காணிப்பாளராக பணியாற்றினேன். பின்னர், பதவி உயர்வு பெற்று அதே பிரிவில் கூடுதல் காவல்கண்காணிப்பாளராக பணியாற்றி 31.03.2009 ல் பணி ஓய்வு பெற்றேன். நான் துணைக்கண்காணிப்பாளராக இருந்த போது, ஆஜர் எதிரிகள் மீதான இவ்வழக்கில் முதல் விசாரணையை ஆய்வாளர் சண்முகநாதன் என்பவர் மேற்கொண்டிருந்தார். அவர் பதவி உயர்வு பெற்று சென்று விட்டபடியால் இவ்வழக்கை மேல்விசாரணை செய்ய எங்களது இயக்குநரகத்தில் எனக்கு உத்தரவு கிடைக்கப்பெற்றது. ஆய்வாளர் சண்முகநாதன் சேகரித்த ஆவணங்களையும், அவர் பதிவு செய்த வாக்குமூலங்களையும் நான் பரிசீலனை செய்து இவ்வழக்கின் மேல்விசாரணையை மேற்கொண்டேன். நான் விசாரணை செய்வதற்காக ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 17 மற்றும் 18 ன்படி விசாரணை செய்வதற்கு எங்கள் தென்சரக காவல் கண்காணிப்பாளர் திரு.திருஞானம் அவர்கள் 03.09.2007 நாளிட்ட உத்தரவை வழங்கியிருந்தார்கள். அந்த உத்தரவு அ.சா.ஆ.83 ஆகும். 10.02.2003 ல் இவ்வழக்கின் மேல்விசாரணையில் சாட்சிகள் திரு.P.செல்வகணபதி, திருமதி.R.சுந்தரவள்ளி, திரு.ஆர்.தங்கவேலு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.02.2003 ல் சாட்சி திருமதி.ஆர்.மணிமேகலை ரத்தினம் என்பவரை விசாரித்து

S SUBA DEVI
Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.14 17:18:01 +0530

வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.02.2003 ல் சாட்சி திருமதி.கேத்தரின் சொர்ணபாய் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம், சென்னை அசோக் லேலண்ட் பைனான்ஸ் கம்பெனிக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில், Ambassador Car Engine No.EDAU-117507, Chasis No.AAU-708301 என்ற வாகனத்தின் விபரங்களை தெரிவிக்கும்படி சொல்லியிருந்தேன். அதே தினம், சென்னை Investment Trust of India என்ற நிறுவனத்திற்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் ஆஜர் எதிரியின் மனைவி திருமதி.ஹில்டா வசந்தி மற்றும் ஆஜர் எதிரியின் தகப்பனார் திரு.இசிடோ பெர்னாண்டோ ஆகியோர் ஒப்பந்த எண்.35537 ல் திரும்ப பணம் செலுத்திய விபரங்களை தெரிவிக்கும்படி கேட்டிருந்தேன். அந்த நிறுவனம் நான் கேட்ட விபரங்களை கொடுத்தற்கான ஆவணம் அ.சா.ஆ.84 ஆகும். அன்றைய தினம் சென்னை Countrywide Consumer Financial Services என்ற நிறுவனத்திற்கு ஒரு கடிதம் அனுப்பி Loan Account No.RTU000000508 என்ற கடனின் விபரங்களை தெரிவிக்கும்படி கேட்டிருந்தேன். அதே தினம் தூத்துக்குடி கனரா வங்கியின் மேலூர் கிளையில் மேலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் கணக்கு எண்கள்.AFM2/95, DPNRT80195, சேமிப்பு கணக்கு எண்.24218 மற்றும் சேமிப்பு கணக்கு எண்.23636 ஆகியவை சம்பந்தமான Ledger பதிவுகளின் சான்றிட்ட நகலை அனுப்பும்படி கேட்டிருந்தேன். அன்றைய தினம் தூத்துக்குடி கந்தசாமிபுரம் SBI வங்கியில் பராமரிக்கப்பட்ட கணக்கு எண் .5/963 மற்றும் கணக்கு எண்.7/1253 ஆகியவற்றில் Ledger பதிவுகளின் சான்றிட்ட நகல்களை அனுப்பும்படி கேட்டிருந்தேன். அந்த ஆவணம் அ.சா.ஆ.85 ஆகும். அதே தினம் திருநெல்வேலி Sriram Chit Funds, கிளை மேலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் இவ்வழக்கின் 3 வது எதிரி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் செலுத்திய தொகை, அவர்களுக்கு வழங்கப்பட்ட ஏலத்தொகை ஆகிய விபரங்களை தெரிவிக்கும்படி கேட்டிருந்தேன். அதே தினம், விளாத்திகுளம் சார்பதிவாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் ஆவண எண்கள்.690/1992, 691/1992, 692/1992, 1303/1992, 876/1992 மற்றும் 1491/1992 ஆகிய பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை அனுப்பும்படி கேட்டிருந்தேன். அதே தேதியில் மதுரை மாடக்குளம் சார்பதிவாளர் எண்.4 அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் அப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.14 17:18:07 +0530

ஆவண எண்கள்.1858/1965 மற்றும் 861/1997 ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை அனுப்பும்படி கேட்டிருந்தேன். அந்த ஆவண எண்.1858/1965 அ.சா.ஆ.86 மற்றும் ஆவண எண்.861/1997 அ.சா.ஆ.87 ஆகும். அதே தேதியில் திருநெல்வேலி LIC Housing மேலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் வழக்கின் 1ம் எதிரி பெற்ற கடன் கணக்கு எண்.460000082 ல் பெற்ற கடன் தொகை, திரும்ப செலுத்திய தொகை ஆகிய விபரங்களை தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அதே தேதியில் தூத்துக்குடி LIC கிளை மேலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் பாலிசி எண்.740733648 ல் செலுத்தப்பட்ட பிரிமீயம் தொகை, முதிர்வுத் தொகை ஆகிய விபரங்களை தெரிவிக்கும்படி கேட்டிருந்தேன். அதே தினத்தில், தூத்துக்குடி New India Assurance மேலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் பாலிசி எண்.31720502 ல் செலுத்தப்பட்ட பிரிமீயம் தொகை விபரங்களை தெரிவிக்கும்படி கேட்டிருந்தேன். 13.02.2003 ல் சாட்சிகள் திரு.எம்.முத்துசாமி, பி.அரசப்பன், எஸ்.சுப்புராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.02.2003 ல் சாட்சிகள் ஜி.இசக்கியப்பன், எஸ்.பேச்சி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.02.2003 ல் சாட்சிகள் பி.ஜஸ்டின், B.ரவிக்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.02.2003 ல் சாட்சிகள் A.அப்துல் சமத், N.மணிவண்ணன், B.மனோஜ், D.ராமஜெயம், சுப்புரத்தினம், M.முத்துசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 19.02.2003 ல் சாட்சிகள் M.நடராஜன், N.நடராஜன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.02.2003 ல் சாட்சிகள் திரு.ஜேம்ஸ் அருமைநாயகம், செல்வி M.ப்ளாரன்ஸ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.02.2003 ல் சாட்சிகள் E.குருமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.02.2003 ல் சாட்சி திரு.செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.02.2003 ல் சாட்சிகள் A.பிச்சை, G.ராஜன், M.நடராஜன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.02.2003 ல் இவ்வழக்கின் 2ம் எதிரி திருமதி.ஹில்டா வசந்தியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.02.2003 ல் சாட்சிகள் செல்வி.ரீனி, ஊமைத்துரை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 26.02.2003 ல் சாட்சி வேல்முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.02.2003 ல் சாட்சி V.கந்தசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம்

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.14 17:18:15 +0530

பதிவு செய்தேன். 01.03.2003 ல் சாட்சி S.முத்துராஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.03.2003 ல் சாட்சி V.மணிமாறன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் 1 மற்றும் 2ம் எதிரியின் வங்கிக் கணக்கின் இருப்பு குறித்து தெரிவித்து அதற்கான ledger Sheet ஐ என்னிடம் கொடுத்தார்.

முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.14 17:18:21 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**